www.padippakam.com

# அகாலம்



சமயவேல்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# அகாலம்

## சமயவேல்

சவுத் ஏசியன் புக்ஸ்

படிப்பகம்

www.padippakam.com

Agalam
Samayavel
First published : May 1995
Cover : Maris
Printed at : Surya Achagam, Madras.
Published by South Asian Books
6/1, Thayar Sahib II Lane
Madras - 600 002.

Rs. 12.00

அகாலம்
சமயவேல்
முதல் பதிப்பு : மே 1995
அட்டை : மாரீஸ்
அச்சு : சூர்யா அச்சகம், சென்னை – 41.
வெளியீடு : சவுத் ஏசியன் புக்ஸ்
6/1, தாயார் சாகிப் 2ஆவது சந்து,
சென்னை - 600 002

ரூ. 12.00

படிப்பகம்

www.padippakam.com

என்னுரை

# தத்துவத்தின் மரணத்திற்கு பிறகு

தத்துவத்தின் மரணத்தைக் கண்டுபிடித்துச் சொன்ன நீட்சேயின் 150வது பிறந்த ஆண்டான 1994ல், தத்துவத்தைப் புதைத்த இடத்தில் முளைத்த புல்வெளியில் நாம் நின்று கொண்டிருக்கிறோம். எல்லாவற்றையும் தலைகீழாக்கும், இருக்கிற சகலத்தையும் மறுக்கிற நீட்சேயிசத்துக்கு வாரிசாக இன்று தெரிதாக்கள் இருந்தாலும், புதைகுழியிலிருந்து தத்துவத்தைத் தோண்டி உயிருட்ட இன்றைய மனிதனுக்கு நேரம் இல்லை. நிறைய விடைகளோடு தொடங்கிய இந்த நூற்றாண்டு, தன் இறுதிப்பகுதியில், 1994ல், தப்புத் தப்பாய் ஆகிவிட்ட எல்லா விடைகளையும் அழித்துக் கொண்டு வெறுங்கையுடன் வெட்கித் தலை குனிந்து நிற்கிறது. மீண்டும் அடிப்படைக் கேள்விகளை எழுப்புகிற திராணி இன்று மனிதனுக்கு இல்லை.

சென்ற நூற்றாண்டில் அரசியல் ஆதிக்க வடிவங்களை படைத்தெடுக்கும் சுமை தத்துவத்திற்குக் கொடுக்கப் பட்டவுடன் அதன் அந்திம காலம் நெருங்கத் தொடங்கியது. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில், செயல் முறையாகவே தத்துவச் சக்கரங்களில் அரசியல் ஆதிக்கங்கள் பூட்டப்பட்டன. முறிந்தது அச்சுமட்டுமா? வண்டியை இழுத்தவர்களும், வண்டியில் ஏறி இருந்தவர்களும் ஐரோப்பாவில் தலை குப்புற விழுந்தார்கள். பூமியில் 'பனிப்போர்' முடிந்ததாக மாஸ் மீடியாக்களில் அறிவிக்கப்பட்ட நாளில் அரசியலும் மரித்தது. ஆட்சிகளைப் பிடித்தலும் அதைக் காப்பாற்றிக் கொள்தலும் என்ற குறுகிய பிழைப்புக் கயிற்றுக்குள் அரசியல் தன் கழுத்தை கொடுத்துக் கொண்டு கொஞ்சங் கொஞ்சமாக உயிரை விட்டது.



படிப்பகம்

இன்று தன் சொந்தத் தளத்தில் முழுமுச்சோடு இயங்கிக் கொண்டிருப்பது விஞ்ஞானம் ஒன்றுதான். நவீன ஸ்விட்சிங் விஞ்ஞானம் மனிதனை Replace செய்யவும், மனித மூளைக்குப் பதவியை உருவாக்குவதிலும், எதார்த்தம் போன்றதொரு எதார்த்தம் உருவாக்குவதிலும், Time Space போன்ற ஆதிக் கருத்தாக்கங்களை அழிப்பதிலும் முனைந்திருக்கிறது. மனிதனை மனிதன் Replace செய்யும் கேலிக்கூத்தை காணவிருக்கும் நாம் இன்று எப்படி இருக்கிறோம்?

(1) இன்னும் மனிதர்கள் பசியால் செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

(2) பஞ்சம், போர், அகதிகள் முகாம், சித்ரவதை முகாம்கள் போன்ற துயரங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

(3) இனங்களுக்கிடையிலான முரண்பாடுகள் முற்றி பகையாக மாறி பெரும் மோதலில் முடிந்து கொண்டிருக்கின்றன.

(4) குடும்பம், கல்விநிலையம், ஆலயம் போன்ற மனிதனின் அகவுலக உருவாக்கத்தின் காரணிகள் உதிர்ந்து கொண்டிருக்கின்றன.

(5) எல்லா நாடுகளிலும் எல்லாவகை ஆளும் அமைப்புகளும் தோற்றுவிட்டன. அடிப்படைவாதிகள் திறந்த உரையாடலின் குரல்வளையை நெறித்துக் கொண்டிருக்கிறார்கள்.

(6) வாழ்வின் அனைத்துப் பிராந்தியங்களிலும் உள்ள பல்வகை ஆதிக்கப் போட்டிகள் பயங்கரமான வன்முறையை உலகம் முழுவதும் கட்டவிழ்த்து விட்டிருக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

(7) தொழிற் புரட்சிக்குப் பிறகு பெரிய நகரங்களில் தோன்றிய ''அடி நகரம்'' (Underground City) இன்று ஒரு ''அடி'' உலகையே வெற்றிகரமாக உருவாக்கி விட்டன.

(8) அரசியலின், கலாச்சாரத்தின் முகங்கள் கோரமாக சிதைக்கப்பட, சித்தாந்தங்களும் கருத்தாக்கங்களும் பன்முகச் சிதைவு கொண்டு நிரந்தரமான குழப்பத்தையும் கலவரத்தையும் மனிதனுக்கு அளித்து விட்டன.

□ □ □

இந்த இடத்தில் தான் நானும் என் கவிதைகளும் நிற்கிறோம். குழப்பத்தாலும், கலவரத்தாலும் ஆசிர்வதிக்கப்பட்ட நவீன மனிதர்களில் ஒருவனாகத்தான் நானும் இருக்கிறேன். இந்தக் கவிதைகளைப் படித்த பிறகு என்னுடைய இடத்தில் நீங்களும் நிற்பதாக உணர்ந்தால், நமக்குள் ஒரு உரையாடலைத் தொடங்க முடியும். ''ஆதியில் ஒரு வார்த்தை இருந்தது'' என்று தொடங்கப்பட்டது போல புத்தம் புதிதான ஓர் உரையாடலை, நம் மனங்களின் அடியாழத்திலிருந்து தொடங்க வேண்டும். நிறைய காயங்களால் நிரம்பிய நம் இருண்ட உள் உலகங்களை வார்த்தைகள் ஒங்கி உச்சரிக்க வேண்டும். பரஸ்பரம் நம் இருவருக்கும் இடையில் ஒன்றுமில்லை என்று தொடங்க வேண்டும். ஒன்றுமில்லை என்பதை ஆழ்ந்த காதலாக மாற்ற வேண்டாம்; ஒன்றுமில்லை என்கிற அளவிலாவது காப்பாற்ற முடியுமா?

காத்திருக்கிறேன்.

**சமயவேல்**

மதுரை
31.10.94



படிப்பகம்

www.padippakam.com

# உள்ளே


| | |
|---|---|
| வயலின் மனிதன் | 9 |
| நானொரு சுதந்திர பிரஜை | 11 |
| இன்றும் நான் | 12 |
| கருப்பு + சாமி | 13 |
| கவிதையாக முடியாத மனிதக் காட்சிகள் | 14 |
| நகரத்துச் சுவர்களின் மத்தியில் | 15 |
| கடைப்பெண்ணுக்கொரு பாட்டு | 17 |
| பிரமிள் எனும்... | 18 |
| அகாலத்தில் விதைகள் | 20 |
| மலை மனிதன் | 21 |
| அபூர்ண மனித கணங்கள் | 22 |
| பூமியின் நான் | 23 |
| கடந்த நிகழ் | 24 |
| என் துண்டுப் படங்கள் | 25 |
| தோழிக்கு | 26 |
| நெருக்கடியில் முகம் | 27 |
| கோயில் கலாச்சாரம் | 29 |
| எதன் கைதி ? | 30 |
| எங்களுக்கு ஒரு அறை இருந்தது | 31 |
| வாழ்த்து | 33 |
| சொந்த ஆத்திசூடி | 34 |
| அ—வண்ண நிலவ முகங்கள் | 36 |


படிப்பகம்

www.padippakam.com


பிரகடனங்கள் வீழ்ந்த காட்டில் 37
பிணங்களின் மத்தியில் 38
அரைக் கணத்தின் புத்தகம் 40
சிலிக்களின் குரல் 41
அந்தத் தெரு 42
சந்தி 45
பூமி மனுஷன் 47
இரவிடம் அகப்படுதல் 48
இன்னுமொரு நண்பன் 50
துக்கம் கேட்க இயலாதவன் 51


படிப்பகம்

www.padippakam.com

அகாலத்தில்
கலந்து விட்ட சிநேகிதர்கள்
பால்ராஜ்
ஜீவானந்தன்
ஜோதிவிநாயகம்
ஆகியோர்களுக்கு

படிப்பகம்

www.padippakam.com

## வயலின் மனிதன்

I

வயலின்களும் இசைப்பர்களும் மறைந்துவிட
இசை என்னைச் சுருட்டி எறிகிறது
பூமிக்கு வெளியே

குரல்களின் அடுக்குகளுக்குள்
பதுங்கியிருக்கும் வண்டுகள்
பாய்ந்து வெளியேறி
என் தலையை மூடுகின்றன

எந்த வடிவத்திற்குள்ளும் அடங்க முடியாத
உயிரின் துக்கம்
ஒரு ஒற்றை வயலினிலிருந்து
கருப்பு வானமாய் பெருகுகிறது

இன்னொரு உடுமண்டலத்தில்
நானும் பியோனோவும்
தொங்குகிறோம் ஒரு புல் நுனியில்
தினசரி வாழ்விலிருந்து மில்லியன்
மைல்களுக்கு அப்பால்
ஓர் அமானுஷ்யப் பரப்பில்
தாளங்களின் காலக் கணக்கு
சிம்பனியின் அடியாழத்தில்
ஒரு தனிமனிதனின் விம்மல்



படிப்பகம்

www.padippakam.com

நடத்துனனின் ஒரு சிறு தவறில்
முழு ஆர்கெஸ்ட்ராவும்
என்மேல் பாய்கிறது
ஒவ்வொரு உறுப்பாய் என்னைக்
கழற்றி எறிந்து விட்டு
ஓய்கிறது இசை

II

அரங்கை விட்டு வெளிவருகிறேன்
ஒரு பிரும்மாண்டப் பியானோவின் இசை
நகர்மேல் பொழிந்து கொண்டிருக்கிறது
பஸ்-ஸ்டாப், கடக்கும் வாகனங்கள்
விருட்டென்று வந்து என்னை ஏற்றிக்கொண்ட
சிட்டி பஸ்; வெளியில் விடைதரும் சிநேகிதி
ஓரத்தில் ஒளி கசியும் கட்டிடங்கள்
வேப்ப மரங்கள், கருப்புச் சாலை, கடைகள்
வேதக்கோயில், த்யேட்டர், ரிக்ஷா வரிசைகள்
எல்லாவற்றுக்குள்ளும் இருந்து
எட்டிப் பார்க்கிறது ஒரு வயலின்

எந்த ஸ்டாப்பிலோ இறங்குகிறேன்
எந்தத் தெருவிலோ நடக்கிறேன்
எந்த வீட்டையோ தட்டுகிறேன்
ஓர் உயிருள்ள வயலினாக நான்
எப்பொழுதோ மாறிவிட்டிருந்தேன்

[To Trivandrum Male Voice And Tirunelveli Chamber Orchestra]



படிப்பகம்

## நானொரு சுதந்திரப் பிரஜை

ஒரு கறுப்புப் பிராணி
சதா என் பின் அலைகிறது
தெருத்திருப்பத்தில்
ஸ்டேஷன் முகப்பில்
ஆபீஸ் வாசலில்
பஸ்–ஸ்டாப் ஓரம்
பஜாரில் படிப்பகத்தில்
என தினசரி வாழ்வுக்குள்
தலை நுழைக்கிறது அடிக்கடி

எஜமானர்களின் பலம்
ஒரேமாதிரியான அவர்கள் புன்னகை
மாறாத அதே வளையங்கள் பின்னல்கள்
நினைவில் கீறிக்கீறி
பாழடிக்கிறது
என் சுதந்திரப் பொழுதுகளை

சட்டென நீளப் பட்டாக்கத்தியை
மனசில் குத்திச் செருகிவிட்டு
ஜனக்கூட்டத்தில் மறைந்து விடுகிறது

நான் தினசரி தயாரிக்கிறேன்
ஒரு பலத்த இதயம்.

www.padippakam.com

## கவிதையாக முடியாத மனிதக் காட்சிகள்

வேலை முடித்து பசியோடு
வீடு திரும்புகிறேன் காலையில்
மீன் வாங்கிக் கொடுத்த ஞாபகம்

வழியில் ரோடு நெடுக
பிச்சை மனிதர்கள்
ரம்ஜான் கஞ்சி வாங்க

ஒரு கிழவன் மசூதி வாசலையே
வெறித்து நிற்கிறான்

வாட்ச் கடை வாசலில்
5 கிழவிகள்
ஒன்று போல் குத்துக்காலிட்டு

ட்ரான்ஸ்பார்மருக்குக் கீழ் இருவர்
ரோகக் கட்டுகளுக்கு
துணி மாற்றுகிறார்கள்

நிறுத்திய கார்கள் ஸ்கூட்டர்கள்
இடுக்குகளில் அலுமினியக்
குழந்தைகளின் விளையாட்டு

டிவிகடை ஷோரூம் திண்டில்
போலியோ நொண்டி மகனை
இடுப்பில் சுமந்தபடி ஒரு/ஓர் சாம்பல் பெண்
என் முகத்துக்கு நேரே நீள்கிறது
ஒரு கிழவியின் வெள்ளை தெளித்த கை—

மனிதக் காட்சிகள்
மனிதக் காட்சிகள்
நவீன தமிழ்க் கவிதை ஆக முடியாத
மனிதக் காட்சிகள்.



படிப்பகம்

www.padippakam.com

## நகரத்துச் சுவர்களின் மத்தியில் ஒரு கிராமத்து மனிதன்

எல்லாச் சுவர்களையும் வெறுக்கிறேன்
குறிப்பாக எங்கள் குடியிருப்பை
சுற்றி வளைத்திருக்கும்
நெடுஞ்சுவரைக் கண்டு அஞ்சுகிறேன்
சொறி நாய்கள் அலையும் சுவர் ஓரம்
நாறும் இருட்டுக்குள் நடக்கையில்
அச்சமும் வெறுப்பும் என்னைச் சூழ்கிறது

சுவர்களின் அடைப்புக்குள்
ஒண்டிக் கொண்டு
இந்த மனிதர்கள் என்ன செய்கிறார்கள்?

கிராமத்தில் கரைப்பத்திரகாளியம்மனின்
விரிவோடிய பாம்புகள் நெளியும்
பாசிபடர்ந்த கரும்பச்சைச் சுவர்களை
கண்டும் பயந்ததில்லை.

ஓர் ஐப்பசி மாத அடைமழையில்
வீட்டின் கீழச்சுவர் இடிந்த போது
தாத்தா அப்பா அப்பத்தா அம்மா அக்கா
மச்சான் எல்லாரும் சேர்ந்து
மண் குழைத்து கல் வைத்துக் கட்டிய சுவரை
எவ்வளவு நேசித்தேன்



படிப்பகம்

www.padippakam.com

## பிரமிள் என்னும்
## நவீனத் துறவிக்கு ஒரு கவிதை

இவர் எதற்காக
என்னைப் பார்த்து
இவ்வளவு கேலியாகச் சிரிக்க வேண்டும்?

என் உருவமே அவருக்கு சிரிப்பாகிவிட்டதா
பேண்ட்
சர்ட்
கண்ணாடி
சிறிய தொப்பை
ட்வின்ப்ளேடு ஷேவ்டு முகம்
பாட்டா கால்
சராசரி இந்தியன்தான் நான்
பின் எதுகுறித்துச் சிரிக்கிறார் இவர்?

கணிச சம்பளம் தரும் ஜாப்
நகைகளோடு மனைவி
லேக்டோஜன் குழந்தைகள்
பீரோ+ஸ்டீல் காட் + மிக்ஸி
கிரைண்டர் + கேஸ் + குக்கர்
டிவி+...... உபகரணங்களோடு
என் வீடு



படிப்பகம்

போக, தினமும் தேவைகள்
நுகர்வு, நுகர்வு, நுகர்வு
வாங்கிக் கொண்டிருக்கிறேன் தினமும்
எதையெதையோ பஜாரில்
என்னென்னமெல்லாமோ விற்கிறான்
தொடர்ந்து விடாமல் முடிந்தவரை
இன்ஸ்டால்மென்டிலாவது
வாங்கிக் கொண்டிருக்கிறேன்

வாழ்க்கை கட்டளையிட்டபடி
டிவி முன் அமர்ந்திருக்கும்
என்னைப் பார்த்து
இந்தத் துறவி எதற்காகச் சிரிக்க வேண்டும்?

என் உள்ளின் உயிரின் ஆத்மாவின்
பரிசுத்தம்
காப்பாற்றப்படவில்லையா?
நொடியில் எதையும் உதறிவிடும்
பரிபூரண சுதந்திரத்தைத்
தொலைத்து விட்டேனா?

என்னய்யா இது பழைய கதை
உலகம் பூராம் உள்ளபடி தான்
நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

www.padippakam.com

# அபூர்ண மனித கணங்கள்

என் வீட்டு
மொட்டை மாடியிலிருந்து
கூரைகளின் காட்சி
எப்பவும் அழகுதான்

புறாக்களின் கும்மாளம்
ஆடும் மரங்கள்
துணிகாயப் போடும் ஈரப் பெண்
குஞ்சுக்குப் பறக்காட்டும் காக்கைகள்
முறைக்கும் பூனை

திடுதிப்பென உடலைத்
தள்ளித் தழுவும் ஒரு சிறு காற்று—

புகை கசியும் கூரைகளைத் தாண்டி
தொங்கும் பெரு வெளி நீலம்
உள்ளை நிரப்புகையில்

கூரைகளுக்குக் கீழே
கிழிபடும் மனிதம் நினைத்து
மனம் சுருளும்



படிப்பகம்

www.padippakam.com

## பூமியின் நான்

துயரம் மிக்க நாட்களுக்குள்
திரும்பிக் கொண்டது பாதை
சோளக் காடுகளைத் தாண்டி
வனாந்திரத்தில்
அடையாளந் தெரியாத ஓடையில்
சப்பாத்திக் கள்ளிகளுக்கு நடுவே
விழுந்து கிடக்கிறேன்

என் செய்தித் தாள்கள்
பிரிக்கப் படாமலேயே கிடக்கின்றன
காற்று முழுதும் பழைய மனிதர்களின்
பழைய வார்த்தைகள். தத்துவங்கள்
தற்கொலை செய்துகொண்ட
அலமாரிகளின் வீச்சம்
சுவாசத்தை அடைக்கிறது

சதிகாரர்கள் கருணையால் சகல
திசைகளிலும் குழப்பப் புகை
சாலைகளுக்கடியில் வரிசையாக பிணங்கள்
மனிதர்கள் விதம் விதமாக மரிக்க,
பூமி ஒரு முடிவைத் தேடி
விரும்பி உருள்கிறது

உலகை மறுப்பேன்
சமூகம் விலக்குவேன்
சகலத்தையும் நிராகரிப்பேன்
எனக்குள் விகசிக்கும்
அன்பையும் பரிசுத்தத்தையும்
காற்று மண்டலம் முழுதும் கலப்பேன்



படிப்பகம்

www.padippakam.com

## கடந்த நிகழ்

முகவரிகளை மாற்றிக் கொண்டு
எவ்வளவு தாமதமாக வந்திருக்கிறது
உன் கடிதம்

கருப்பு உளுந்துகளாக
உன் எழுத்துக்கள்
உருண்டு
சிதறுகின்றன எனக்குள்
நுழைய முடியாமல்

உன் ஒவ்வொரு அசைவோடும்
என் பொழுதுகளைப் பிணைத்து
தாகித்து அலைந்த போது
ஒரு வார்த்தை
தர முடியாதவள் நீ

வெறும் சிநேகிதப் புன்னகையைத்
தாண்ட முடியாதபடி மனசைத்
தூணில் கட்டி வைத்துக் கொண்டு
என் படிப்பென்ன வேலையென்ன
ஆஸ்தியென்ன என்று நீ நடத்திய
ரகசிய விசாரணை கண்டு
எப்படிச் சுருங்கினேன்

காலம் கடந்த உன் கடிதத்தை
அப்படியே ஒட்டி அனுப்புகிறேன்
'விலாசதாரரைக் காணோம்'
என்ற குறிப் போடு.



படிப்பகம்

www.padippakam.com

## என் துண்டுப் படங்கள்

சேர்ந்து கிடக்கிறது
எனக்குள்
ஏராளமாய்
துண்டுப் படங்கள்

கொஞ்சம் எடுத்து அடுக்கி
—காலவாரியாக—
ப்ரொஜக்டரில் ஒட்டிப் பார்க்கிறேன்

ஒழுங்கும் இல்லை
அர்த்தமும் இல்லை
அடிப்படையென்று
எதுவுமில்லை

பைத்தியக்காரனின் பயாஸ்கோப்!

பார்க்கத் தகுந்தது:
வர்ணங்கள் ஒன்றையொன்று
விழுங்கும் அற்புதம்.



படிப்பகம்

www.padippakam.com

## தோழிக்கு

இன்று உன் முகம்
வாடி வதங்கி
பார்க்கச் சகிக்கவில்லையே

அலுப்பும் சலிப்பும் சூழ
மேஜை மேல் தலை சாய்த்து
அழவா செய்கிறாய்

உன் துயர வட்டத்தைத் தொட
அஞ்சுகின்றன என் கைகள்

முழுசுமாக
வெறுத்து விட்டாயா

எல்லாம்
பொய்யாய் போலியாய்
சகலமும் கைவிட்டு விட்டதா

உண்மையில்
உனக்குத் தர
ஒரு ஆறுதலுமற்று
நடுங்கிக் கொண்டிருக்கிறது
என் ஆத்மா.

நீ தான் நானோ?



படிப்பகம்

www.padippakam.com

## நெருக்கடியில் முகம்

I

குன்றாக முடியாத பாறையின் அடியில்
வீடுகள் குவிந்த சிறுநகரம் கோ—
என்னுடையது

சமஉரிமையுடன் பன்றிகள் நடமாடும்
டால்துரை பங்களா தெரு என் தெரு
போகவும் வரவும் நடந்து நடந்து
மின்கம்பம், நான், தெரு மூவருக்குள்ளும்
பெருநட்பு

வாடகை எனினும் 84/2 என் வீடு
வீட்டினுள் நிழலும் மனைவியும்
தண்ணீர் சோறு கட்டில் சுவர்கள்
பல்லிகள் சேர் டேப்ரிகார்டர்
அவ்வப்பொழுது வரும் அணில்
முக்கியமாக குழந்தைகள்

மெயின் ரோட்டு ஆபீஸில்
பகல் முழுதும் என்னைப் பிடித்து
வைத்துக் கொள்ள
வெள்ளை வயர்களால் பின்னப்பட்ட
S டைப் ஸ்டீல் சேர் (கையுள்ளது)

அதே வார்த்தைகளுடன் அதே நண்பர்கள்
ரம்யம் இழந்த மாலைப் பொழுதுகள்



படிப்பகம்

www.padippakam.com

II

மலை முகடுகளுக்கும் மேலே
வெண் மேகங்களோடு
பறந்து கொண்டிருக்கிறேன்

கரிசல் பெருவெளியில்
ஓர் அம்மணச் சிறுவனாய்
நான் ஓடிக் கொண்டிருக்கிறேன்

ஓடையில் என் ஆடுகள் மேய
எங்கோ ஒரு கருவ மரத்தடியில்
வானம் பார்த்து படுத்துக் கிடக்கிறேன்

III

தூக்கம் வராத ஒரு நடுராத்திரியில்
சந்தேகம் ஒன்று என்னைப் பிளக்கிறது
வாழ்கிறேனா உறைகிறேனா
கடக்கிறேனா சிக்குகிறேனா

எனக்குள் பாளம் பாளமாக
உறைந்து கிடக்கும்.
செத்த பிரதேசங்களில் இடறி விழுகிறேன்

அர்த்தமும் அர்த்தமின்மையும் ஒரு சேர முத்தமிட
இருப்பின் மெய்முகம் கண்டு
மலைத்து நிற்கிறேன்

IV

மொத்தத்திலிருந்தும் விடுபடுகிற ஆசை
ஒரு சிறு செடியாய்
முளைத்திருக்கிறது எனக்குள்.



படிப்பகம்

www.padippakam.com

## கோயில் கலாச்சாரம்

பாம்பை வணங்குவோம்
பெருச்சாளியை வணங்குவோம்
பேப்பரை வணங்குவோம்
சதுரங்களை வணங்குவோம்
முக்கோணங்களை வணங்குவோம்
பஸ்ஸைக் கும்பிடு
ரயிலைக் கும்பிடு
பல்லியைக் கும்பிடு
நெருப்பைக் கும்பிடு
நடிகை ஸ்ரீஸ்ரீயைக் கும்பிடு
சாராய வியாபாரியைக் கும்பிடு
ஆட்டோவுக்கு பொட்டு வைத்து
விழுந்து கும்பிடு
எம். எல். ஏவை கும்பிடுவோம்
ஆபீசரை வணங்குவோம்
பெரிய ஆபீசரை தண்டனிடுவோம்
டிவியை கும்பிடுவோம்
மந்திரிகள் காலில் விழுவோம்
உளுந்த வடையை கும்பிடுவோம்
பனியனைக் கும்பிடு
ஜட்டியைக் கும்பிடு
நிலாவைக் கும்பிடு
சூரியனைக் கும்பிடு
காக்காவை வணங்கு
கழுதையைக் கும்பிடு
கும்பிடு கும்பிடு கும்பிடு
தமிழா
இரு கரங் குவித்து
கும்பிட்டுக் கொண்டே இரு.



படிப்பகம்

www.padippakam.com

## ஏதன் கைதி ?

அடிக்கடி வெளியே
எட்டி எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்
இந்த ஜன்னல்
அல்லது நிலையோரம்
சமையலறை ஜன்னல்
பின்வாசல்
அல்லது ஓர ஜன்னல்
மாற்றி மாற்றி
எட்டி எட்டிப் பார்க்கிறேன்
அலுக்காமல் தெருவைப் பார்த்தபடியே
நிற்கிறேன் அல்லது
மொட்டை மாடி ஏறி
எல்லாத் திசைகளையும் பார்த்து
நிற்கிறேன்
எவ்வளவு பார்த்தாலும்
வீட்டுக்குள் நுழைந்ததும்
திரும்பவும்
எட்டி எட்டி



படிப்பகம்

www.padippakam.com

## எங்களுக்கு ஒரு அறை இருந்தது

ஆசிரமம் தெருவில்
எங்களுக்கு ஒரு அறை இருந்தது
நகரத்தில் எதனிடமும் ஒட்டுப்பட முடியாமல்
கூரைகளுக்கு மேல் மிதந்த
மிகச் சிறிய அறை இது

சார்மினார் கோல்டுபிளேக் வில்ஸ்பில்டர்
செய்யது பீடிப் புகைகள் சூழ
முகங்களின் உரையாடல்
பகிர்வுகள் விவாதங்கள் விவாதங்கள்
வாழ்வின் பிரபஞ்சத்தின் சகல முகங்களையும்
அக்கு வேறு ஆணிவேறாய் அலசினோம்

சமயத்தில் அறை நகர்ந்து
காந்தி மைதானத்தில் கூடும்
புறநகர் பாலச்சுவர்
அல்லது மேடேறி கதிரேசன் மலை சேரும்

வாழ்வின் விசாரத்தை எப்பவும்
கூடவே இழுத்துக் கொண்டு
அலைந்தது எங்கள் அறை

உலகைச் சீரமைப்பதற்கான கருவிகளை
ஏராளமாய் உற்பத்தி செய்து (தலைகளில்)
அறை முழுதும் தொங்க விட்டோம்

எதுகுறித்தும் எவ்விதக் கட்டுப்பாடும் விதிக்காமல்
அறைச்சுவர்கள் பிரியமுடன் அளித்து வந்த
சுதந்திரத்தை எல்லோரும் உண்டு வந்தோம்



படிப்பகம்

எங்கோ சாப்பிட்டோம்
எப்போதோ தூங்கினோம்
எல்லா இடங்களிலும் டீ குடித்தோம்
அவன் காசு கொடுத்தான்
இவன் சிகரட் வாங்கினான்
சதா புகை பிடித்தோம்
இளந்தாடியுடனும் குறுஞ்சிரிப்புடனும்
ஒருவன் பாட்டில்கள் கொண்டு வந்தான்
புரோட்டாக்களும் இட்லிகளும் பார்சலில்
மிதமான போதையில்
எல்லாவற்றையும் மிகத் தெளிவாக
விளங்கிக் கொண்டோம்
ஆல்கஹாலின் நெடியில்
அடிமனதின் துக்கம் கலந்தோம்
உயிரை அறைக் காற்றில்
மிதக்க விட்டோம்

நண்பர்கள் கூடக் கூட
அறை அகன்று விரிந்தது ஒருவர் பாயில்
மூவர் தரையில் இருவர் சேரில்
படியில் மூவர் நியூஸ் பேப்பரில் இருவர் என
தாறுமாறாய் படுத்து
இரவுகளைக் கடந்தோம்

அறையை விட்டுக் கிளம்பி
குடும்பம் கட்டியிருக்கும் நாங்கள்
வீட்டையும் அறையையும் இணைக்க முடியாமல்
திணறிக் கொண்டிருக்கிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

## வாழ்த்து

மணமகளே
எவ்வளவு சந்தோஷம்!
சகல உணர்வுகளும்
குழப்பிப் பூசிய புதூஉ முகம்— இன்று
முழுசுமாய் இன்னொரு பெண்ணோ?

ஒரு சமயம் மிகுந்த ஆசையுடன்
நான் பற்றிக் கொண்ட அந்த விரல்கள்
மணமகனின் விரல்களுக்குள்
பின்னியிருப்பது குறித்து வருத்தமில்லை

பழக்கம், சிநேகிதம், காதல்—
எல்லாம் சரிந்து இடம் மாறும்
அரூப வினையாட்டையும்
ரசிக்கத் தொடங்கி விட்டேன்

புதுசு புதுசாக உன்னை அழகாக்குகிற,
நான் பல முறை முத்தமிடத்துடித்த
அந்த முகக் குழிவுகளில்
என்ன விநோத வர்ணம், இன்று—

வாழ்த்துகிறேன்
துளிக்கூட பொறாமையின்றி
உங்களை வாழ்த்துகிறேன்



படிப்பகம்

www.padippakam.com

## சொந்த ஆத்திசூடி

அரசியல் விலக்கு
தத்துவம் தவிர்
கனவு காண்
காதலித்துக் கொண்டே இரு
பிரயாணம் செய்
கட்டுரை படிக்காதே
புரிந்து கொள்
இசையை உண்
கட்சிகளைக் கண்டு ஓடு ஓடு
வரலாற்றை ஒழி
குழந்தைகள் பெறு
கடிகாரத்தைத் தூக்கி எறி
பறவைகள் பார்
செய்தித்தாள்களில் காமிக்ஸ் மட்டும் படி
தாமதித்துப் போ
ஒரு நாளாவது நடனம் ஆடிப் பார்
நடந்து செல்
நகரங்கள் வெறு
சிறு பெண்களிடம் அரட்டை அடி
வாக்குறுதிகளை மீறு
உத்யோகம் தவிர்
நீச்சல் படி
கூட்டங்களுக்குப் போகாதே
விவசாயம் செய்
பட்டினி கிட



படிப்பகம்

கடிதங்களுக்கு பதில் எழுதாதே
அடிக்கடி அண்ணாந்து ஆகாயம் பார்
வியாபாரம் வெறு
ஒரு செடி முளைத்து வளர்வதை உற்றுக் கவனி
கடைவீதிகளில் அலைய வேண்டாம்
சும்மா படுத்துக் கிட
தேசீய அசிங்கம் (டிவி) நடுவீட்டில் எதற்கு?
நுங்கு தின்
சிற்பங்களை ரசி
அடிவானத்தோடு உரையாடு
எதையும் கும்பிடாதே
முதுமையை கொண்டாடு
டீயும் சிகரட்டும் துணை
விஞ்ஞானம் விலக்கு
பெண்களோடு இரு
ஆயிலும் அரசியலும் மனிதகுல எதிரிகள்

## பிணங்களின் மத்தியில்

என் வீட்டில்
ட்யூப் லைட்டுக்குக் கீழே
தொங்குகிறது ஒரு
எட்டுக்கால் பூச்சியின் பிணம்
ஒரு கொத்துப் பூவோடு
அம்மாவின் பிணம் போட்டோவுக்குள்
தொடர்ந்து கொஞ்சம்
சாமிகளின் பிணங்கள்
மிதந்து வருகிறது ஊதுவத்திப் புகை
என்னையும் பிணமாக்க
சுதாரித்து எழுந்து உட்கார்கிறேன்
முட்டி மோதுகின்றன
என்னுள்ளும் தொங்கும் பிணங்கள்

பிரதான மார்ச்சுவரியில்
கருந்துணி மூடி நேர்த்தியாய்
அடுக்கி வைக்கப்பட்டிருக்கும்
அடையாளம் காணப்பட்ட பிணங்கள்

அ) ஒடுக்கமான ஓசி அறைகளில்
சார்மினார் குடித்தபடி இந்தியப்புரட்சி பற்றி
கனவு கண்டவன்
ஆ) விஜி என்னும் பருத்திப் பூவின் காதலன்
இ) பியானோ மாணவன்
ஈ) …………

www.padippakam.com

அடையாளமற்ற பிணங்களோ
கணக்கற்று புழுங்குகின்றன
முகப்பு ஏ. சி. அறையில்

பிணங்களின் மத்தியில்
தாடி வளர்த்து பீடி குடித்து
திசையின்றி அலைகிறது
ஒரு பைத்யம் எனக்குள்.



படிப்பகம்

www.padippakam.com

## அரைக் கணத்தின் புத்தகம்

ஏய், நில், நில்லு—
சொல்லி முடிப்பதற்குள்
மாடிப் படிகளில் என் குட்டி மகள்
உருண்டு கொண்டிருக்கிறாள்.

பார்த்துக்கொண்டு
அந்த அரைக் கணத்தின் துணுக்கில்
அவள் உருள்வதை நான்
பார்த்துக் கொண்டு மட்டும்.

அவளது சொந்த கணம்
அவளை எறிந்து விட
அவள் உருண்டு கொண்டிருக்கிறாள்.

என் சகலமும் உறிஞ்சப்பட்டு
ஒன்றுமற்ற உடலமாய் நான்
அந்த அரைக் கணத்தின் முன்
ஓடிக் கொண்டிருக்கிறேன்.

ஒரு வீறலுடன் அக்கணம் உடைய
நெற்றியில் அடியுடன்
அழும் மகளை அள்ளுகிறேன்
—கணங்களின் மீட்சி

என் பிரபஞ்சத்தை சேராத
அந்த அரைக் கணத்தை ஒரு
நோட்டுப் புத்தகத்தில் குறித்து வைத்தேன்.

ஒரு சொடுக்கில், இமுப்பில், புரட்டலில்
முழுச் சித்திரமே மாறிவிடும்
வினோதப் புத்தகம் அது.



படிப்பகம்

www.padippakam.com

## சிலிக்கனின் குரல்

கொழுத்த கட்டிடங்களின்
குளிரூட்டப்பட்ட அறைகளில்
VDU திரைகளில் மின்னுகிறது
நம் ஆத்மாக்களின் விலைப்பட்டியல்

நடுவீட்டுக் குட்டித் திரையில்
ஆட்டோமடிக் ஹன்களின் இசையோடு
நாறும் உலகம்

லார்ஜ் ஸ்கேல் ICக்களின்
சித்து விளையாட்டில்
வேலையற்றோர் குவிகிறார்கள்
தெருவோரம்

பறக்க இருக்கும்
மிஸ்ஸைல்களின் தலையில் தொங்குகிறது
நூற்றாண்டுகள் தாண்டிய
மனித இனத்தின் தலைவிதி

வருகிறது
மனிதனே அற்ற பூமி
அல்லது பூமியே அற்ற பிரபஞ்சம்





படிப்பகம்

www.padippakam.com

## அந்தத் தெரு

அந்தத் தெரு
மெயின் ரோட்டிலிருந்து சாவகாசமாக
ஒரு வட்ட வில்லாய் வளையும் திருப்பத்தில்
அப்பிக் கொண்டது வசீகரம்

மதுரையின் தூசித் தெருவோ
தூத்துக்குடியின் மலம் நாறும் உப்பரித்த
பழம் தெருவோ
கொஞ்சமும் கிளர்ச்சியூட்ட முடியாமல்
உப்பு சப்பற்று நீளும் சென்னைத் தெருவோ
(இதுவே நூற்றுக்கணக்கான ஊர்களில்
ஆயிரக் கணக்கான பஜார்களாய் நீளும்
மொண்ணைத் தனம்)

இல்லாமல்
பத்தடி அகலத்தில் வழுவழுவென்று
வெள்ளை விரிப்பாய்
அந்தத் தெரு வளைந்து வளைந்து
அழைத்துப் போனது.

அணைத்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு வீட்டையும்
சந்தோஷமாய் நிறுத்தி நிறுத்தி காட்டியது.



படிப்பகம்

www.padippakam.com

வேப்ப மரங்களும் வளைந்த தென்னைகளும் சூழ
பெரிய கிராதிகள் கம்பி அழிகள்
உச்சியில் சுண்ணாம்பு யானைகளும் கொண்ட
அந்த ரெட்டை வீட்டை ரொம்பப் பிடித்துவிட்டது
'பேராண்டி வாப்பா' எனக் கத்தியபடி
ஒரு முதிர்ந்த அம்மாயி ஓடி
வரக் கூடும் எனத் தோன்றியது.

மேலும் என்னைக் கடந்து போன அந்த
ஒரேயொரு சைக்கிள்காரரை
அவரது முகத்தைக்கூட பார்க்கவில்லை எனினும்
அளவற்று பிடித்துப் போனது.

ஒரேயொரு அரசமரமும் பிள்ளையாரும்
விளையாடும் பிள்ளைகளும் கொண்ட
ஒரு குட்டி மைதானத்தின் கரையில்
நிறைய நேரம் நின்று கொண்டிருந்தேன்.

எதிரில் இளம் பச்சை டிஸ்டம்பரில்
அரண்மனைச் சாயலில் என்னை மறித்த வீட்டின்
மாடியில்

800 வருஷங்களுக்கு முன்பு பார்த்த அதே கோணத்தில்
ஈரக் கேசம் கோதும் பெண்ணின் கண்ணில்
அதே நேச மின்னல்.

அடுத்த பழம் கார வீட்டின்
நெடிய சுண்ணாம்புச் சுவரின்
மழையும் வெயிலும் காற்றும் பனியும் சகலமும்
இணைந்து பூசிய வினோதப் பாசிக் கருப்பில்
மனம் வழுக்கியது.
நூற்றாண்டுக் கணக்கில் வாழும் ஒருவரின்
கை என் தோளில் பட்டது.



படிப்பகம்

மனிதர்கள் ஆணும் பெண்ணுமாக
குழந்தை குட்டிகளுடன்
துணி காயும் கொடிகளுடன்
மாடு நாய் கோழிகளுடன்
மரங்கள் சூழ்ந்த விதம் விதமான வீடுகளில்
படிகளில் உட்கார்ந்து வாசலில் சாய்ந்து
நின்று குனிந்து பேசியபடி கத்தியபடி
இசையுடன் பாட்டுடன் வெளிச்சத்துடன்
குவிந்து வாழும் அந்தத் தெரு முழுவதும்
நிறைந்து கிடக்கும் மனுஷக் கதகதப்பு
என்னை நிரப்ப
எப்பொழுதும் காத்திருக்கிறது.

## சந்தி

நான் உன் கணவரோடு
நீ என் மனைவியோடு

நம்மை எதிரெதிர் ஆசனங்களில் அமர்த்தி
வேடிக்கை பார்க்கும்
மிச்சரும் காப்பியும்

நீங்கள் எங்கு படித்தீர்கள்
பஸ் ஸ்டாண்ட் பக்கமா உங்கள் வீடு
77ல் சென்னையிலா இருந்தீர்கள்
குவைத் வெயில் எப்படி
டிரைவிங் கஷ்டமா அங்கே
அடேடே கல்யாணத்திற்கு வந்திருக்கலாமே
மழையா வரும்போது
மோகன் உங்கள் ப்ரண்டா, அப்படியா?

எல்லாம்பேசிக் கொண்டோம்
அந்த ஒரேயொரு விஷயம் மட்டும்
தொடப்பட முடியாமல்
நம்மைச் சுற்றிச் சுற்றி
புதைந்து எழுந்து புதைந்து
நழுவிக் கொண்டிருந்தது.

www.padippakam.com

கேசட் முடிந்து அறையில்
மௌனம் விழுந்த அரை நிமிஷம்
நமது இருதயங்களுக்கிடையில் எலும்புகள் நழுவின
மொத்த சூழலையும் நொறுக்கி
நம் முழு இருப்பையும் அசைத்து விடும்
ஒரு கனத்த கேள்வியின்
விசுவரூபத்தின் முன்
தடுமாறி நின்றோம்.

கேசட் மீண்டும் தொடர
நம் இருதயங்களின் நல்லோரத்தை மட்டும்
விரிவு படுத்தி விரிவு படுத்தி
நாம் சிரிக்கத் தொடங்கினோம்.



படிப்பகம்

## பூமிமனுஷன்

எல்லா நிலக் காட்சிகளையும்
பெரும் ஆசையுடன்
நான் நேசிக்கிறேன்

எங்கு நின்றிருந்தாலும்
அடிவானம் வரை தெரிகிற பூமி வளைவு
என்னைப் பெரிதும் கிளர்ச்சியுறச் செய்கிறது

விதம் விதமான சீதோஷ்ணங்கள்
வெவ்வேறு தாவரங்கள் பிராணிகள் பறவைகள்
ஒவ்வொரு மண்ணிலும் ஒவ்வொரு அழகு

எல்லா மண்ணிலும் எம் மனிதர்கள்
எத்தனை உடைகள் வீடுகள் மொழிகள்
எத்தனை பண்பாடுகள் மொழிகள்

எல்லா வகை நிலங்களிலும்
எல்லா வகை மனிதர்களோடும்
கொஞ்ச கொஞ்ச காலம்
வாழ விரும்புகிறேன்

பூமி உருண்டை முழுசுக்கும்
என்னை நண்பனாக்குகிற
இந்த நிலக்காட்சிகளை நான்
பெரிதும் நேசிக்கிறேன்.



படிப்பகம்

www.padippakam.com

## இன்னுமொரு நண்பன்

கிராமத்திலிருந்து நாய்க்குட்டி ஒன்று
வெள்ளை அழகாய்
அப்பா வாங்கி வந்தார்
பழகட்டும் என்று கட்டி வைத்தாள் அக்கா
மூடி வைக்க தம்பி ஒரு
அட்டைப்பெட்டி வாங்கி வந்தான்

பழக முடியாமல் குட்டி அழுது குரைத்தது
அரற்றித் திமிறி கழுத்தெல்லாம் புண்ணானது

சகிக்க முடியாத அவன்
அவிழ்த்து விடச் சொல்லிக் கத்தினான்
விடுதலையான குட்டி பாய்ந்து
வாசலைக் கடந்து தெருவைக் கடந்து
மெயின் ரோட்டில் லாரியை மறித்து
நசுங்கிப் போனது

உலகம் பழகவோ
ஓடிக் கடக்கவோ முடியாமல்
தினமும் நசுங்குகிறான் அவன்



படிப்பகம்

www.padippakam.com

## துக்கம் கேட்க இயலாதவன்

அந்தப் பொழுதும் வெளியும்
கைதாகித் தவிக்க
காற்றில் மௌனம் கலந்து
நம் நாக்குகளை உள்ளிழுக்கும் உன்
மனைவி இறந்த துக்கம்
அறை நிரம்பி
என் மூச்சை அடைக்கும்
மரணத்தின் மின்னலில் துவண்டு விட்ட
உன்னை என் கைகளில் ஏந்தி
மார்புறத் தழுவி ஆறுதல் படுத்துவேன்
ஆனால் மாலை சூடிப் படுத்திருப்பவளிடம்
நாம் எதைக் கேட்க முடியும்?

மனிதம்படாத ஒரு வெளிப் பொழுதில்
நாம் எல்லோரும் சந்தித்து
முத்தமிட்டுக் கொள்ள முடியலாம் ஒருவேளை.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

